முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருப்பூர்

அசல் வழக்கு எண். 13/2021

இன்று 2025 ம் ஆண்டு ஜனவரி திங்கள் 23 ம் நாள் இன்று இந்த வா.சா.1ன் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54 வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு.T.பிரவின்குமார், B.A.,B.L., அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : கங்காதேவி | தொழில் | : |
| தகப்பனார் பெயர் / கணவர் பெயர் | : சேகர் | கிராமம் | : சேடர்பாளையம் வடக்கு தெரு |
| வயது | : 60 | தாலூக்கா | : |
| நாள் | : 23-01-2025 | மாவட்டம் | : திருப்பூர் |

**முதல் விசாரணை தொடர்ச்சி:**

நான் இவ்வழக்கில் வாதி ஆவேன். நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்திலுள்ள கையெழுத்து என்னுடையது தான். அதிலுள்ள சங்கதிகள் யாவும் என்னால் சொல்லப்பட்டு தயார் செய்யப்பட்டவை ஆகும். அவற்றை நான் நன்கு படித்து புரிந்து கொண்டு கையெழுத்து செய்திருக்கிறேன்.

கடந்த 06.01.1943 ம் தேதியிட்ட கிரய பத்திரத்தின் நீதிமன்ற சான்று நகல் **வா.சா.ஆ.1** ஆகும். கடந்த 18.11.2002 ம் தேதியிட்ட மாண்புமிகு திருப்பூர் சார்பு நீதிமன்ற அ.வ.எண்.510/2005 ன் தீர்ப்புரை, தீர்ப்பாணையின் சான்று நகல் **வா.சா.ஆ.2** ஆகும். கடந்த 06.01.2016 ம் தேதியிட்ட தான செட்டில்மெண்ட் ஆவணத்தின் பதிவு சான்று கணினி நகல் **வா.சா.ஆ.3** ஆகும். கடந்த 17.08.2016 ம் தேதியிட்ட கிரய பத்திரத்தின் பதிவு சான்று கணினி நகல் **வா.சா.ஆ.4** ஆகும். என்னுடைய குடும்ப அட்டையின் உண்மை நகல் **வா.சா.ஆ.5** ஆகும். என்னுடைய ஆதார் அட்டையின் உண்மை நகல் **வா.சா.ஆ.6** ஆகும்.

மேலே கண்ட ஆவணங்களை எனது தரப்பு ஆவணங்களாக குறியீடு செய்து தாவாவை அனுமதித்து உத்தரவிடுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

3, 4 மற்றும் 13 பிரதிவாதிகளின் தரப்பு குறுக்கு விசாரணைக்காக தாவா ஒத்தி வைக்கப்படுகிறது.

சாட்சி கூறியபடி என் வாய்மொழிப்படி தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டப்பட்டு, அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்துப் பெறப்பட்டது.

PRAVEEN KUMAR T

Digitally signed by PRAVEEN KUMAR T
Date: 2025.01.23 15:24:12 +1100

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி
திருப்பூர்.